
நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய, மாத இதழ்)



அண்ணன் கையில் நீர்வார்க்க அருமைக் கணவன் கண்பார்க்க
மண்ணில் எமக்கு மணங்காட்டும் மதுரைத் தேவி ! மீனாட்சி !
எண்ணில் அடங்காக் கன்னியர்கள் எங்கள் நாட்டில் இருக்கின்றார்
கண்ணைக் காட்டி அவர்களையும் கரையேற் றிடநீ வருவாயே!

எப்ரல் 1989

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8
ஒலி 3

விபவ
பங்குனி

ஏப்ரல்
1989

பொங்குருச் செல்வம் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருளவல்ல இணையிலா எம்பிராட்டி
பங்கயத் தடம்சூழ்கூடல் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை அடிக்கமலங்கள் போற்றி

— திருவிளையாடல் புராணம்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.

தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ 24.00

நல்லாசிரியர் முனைவர் கே. நாகப்பன்

அரிமழத்தைச் சேர்ந்த முனைவர் திரு. கே. நாகப்பன் கல்வியில் காட்டிய பேரார்வமும் மனஉறுதியும் அவர் குடும்பத்தின் ஏழ்மையை விரட்டியது எனலாம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1954ல் B. E. Honoursல் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்ற இவர், பர்மாப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகத் தம் பணியைத் துவக்கினார். அங்கு பகுதி நேரப் படிப்பில் Management & Administrationல் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். பின் தாயகம் திரும்பி 1957-58ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மின் பொறியியல் துறையில் விரிவுரையாளராகவும் பின் இரண்டு ஆண்டுக் காலம் சேலம் தியாகராசர் தொழில் நுட்பக் கல்லூரியில் முதல்வராகவும் பணியாற்றினார்.



பின் அமெரிக்காவில் பர்டியூ பல்கலைக் கழகத்தில் M. S. பட்டமும் அதன் பின் அங்கு 1965ல் 'Computer Methods in Power System' என்ற அரிய ஆராய்ச்சி மூலம் முனைவர் பட்டமும்பெற்றார்.

மதுரை. தியாகராசர் பொறியியற் கல்லூரியில் மின் பொறியியல் துறைத் தலைவராக 20 ஆண்டுக் காலம் சிறப்பாகப் பணியாற்றிய இவர் தானாக விரும்பி ஓய்வு பெற்றார். ஆனாலும் இவரது தொழில் அனுபவத்தையும் திறமையையும் காட்ட இவருக்கு வாய்ப்புகள் குவிந்தன. 1982-87 ஆண்டுகளில் இவர் பல ஊர்களில் பல நிறுவனங்களில் கம்ப்யூட்டர் விண்ணப்பங்கள் தொடர்பான கருத்துக்களை வழங்கும் ஆலோசகராக அரும் பணியாற்றினார். Operation Research துறையில் திறமை பெற்ற இவர், தியாகராசர் நிர்வாகப் பயிற்சிப் பள்ளியில் 13 ஆண்டுகளும் மதுரைக் காமராசர் பல்கலைக் கழக M. B. A. மாணவர்களுக்குச் சில ஆண்டுகளும் பகுதி நேர ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவரது கல்வி புகட்டும் திறனை நன்கறிந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மீண்டும் இவருக்கு நல் வாய்ப்பினை Computer centre Director பொறுப்பினை அளித்து தன்னகத்தே வைத்துக் கொண்டுள்ளது. இன்றைய மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் படிப்பின் அவசியத்தையும் திரு. நாகப்பனின் திறமையையும் அறிந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தற்போது இவரைத் துறைத் தலைவராகக் கொண்டு இந்த ஆண்டு கம்ப்யூட்டர் பொறியியல் கல்வியை (Computer Engineering Course) தொடங்கியுள்ளது பெருமைக்குரியதாகும்.

திரு. நாகப்பன் பல கருத்தரங்குகளில் பங்கு பெற்று தனது ஆராய்ச்சிக் கட்டுரைகளை வாசித்துள்ளார். இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகைகளில் இடம் பெற்றுள்ளன. இவரிடம் ஆராய்ச்சி மேற்கொண்ட மூவர் ஏற்கனவே பொறியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். மற்றும் சிலர் இப்போது இவரிடம் ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர்.

திரு. நாகப்பன் 34 ஆண்டு கள் ஆசிரியராகவும் 20ஆண்டுகள் ஆராய்ச்சித் துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு சிறப்புப் பெற்றவர். தொடக்க காலத்தி லிருந்தே கம்ப்யூட்டர் வளர்ச்சி யோடு தன்னைப் பிணைத்துக் கொண்டவர். ஏறத்தாழ அனைத்து கம்ப்யூட்டர் மொழிகளிலும் கற் றுத் தேர்ந்தவர். திருக்குறளிலும் தமிழ் இலக்கியத்திலும் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர்.

இவரது புலமை அறிந்த தியாகராசர் பொறியியற்கல்லூரி, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழ கம், மற்றும் அண்ணாமலைப் பல் கலைக் கழகம் ஆகியவை இவரைப் பாடத் திட்ட உறுப்பினராக ஆக் கியதோடு அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினராக வும் இவரை நியமித்துள்ளது.

இவர் Data Processing' Computer Organisation என்னும் பாட நூல்களின் ஆசிரியர். Electrical circuits, Computer Methods in Power System என்ற நூல்களின் இணை ஆசிரியர்.

இவர் சிறந்த விளையாட்டு வீரர்; நல்ல நடிகர், சமூக சேவை செய்வதில் ஆர்வமிக்கவர். நல்லா சிரியர். சமூக சீர்திருத்தவாதி.

அண்மையில் தமிழக அரசால் நல்லாசிரியர் எனப் பாராட்டப் பெற்று கௌரவிக்கப் பெற்றவர்; இவரது துணைவியார் திருமதி மீனாட்சி நாகப்பன் மதுரை தியாக ராசர் கலைக் கல்லூரியில் கணிதத் துறைப் பேராசிரியையாகப் பணி யாற்றி வருகிறார்.

மாணவப் பருவத்திலும் பிற் காலத்திலும் இவரது நலனில் அக்கறை காட்டிய நகரத்தார் பெருமக்கள் பலர். எனினும் குறிப் பாக பனையப்பட்டி சுப. அ. ராம. சகோதரர்கள் காலமறிந்து இவ ருக்கும் இவரது குடும்பத்தாருக் கும் செய்துள்ள, செய்து வரும் உதவிகளை இவர் நன்றி உணர் வோடு கூறுகிறார்.

— பேராசிரியை
சுலோசனா சேவுகன் செட்டி

நகரத்தார் பக்தி நெறி மன்றக் கூட்டம்

நகரத்தார் பக்தி நெறி மன் றத்தின் கூட்டம் 18-3-89 மாலை மதுரை நகர விடுதியில் நடை பெற்றது. டாக்டர் திரு. எஸ். சண்முகம் செட்டியார் வரவேற் றுப் பேசினார். அவர் பேசும்போது அன்பும் பக்தியும் இருந்தால் தான் தொண்டு செய்ய முடியும் என்றும் மனித இதயம் உல கத்தைவிடப் பெரியது என்றும் பக்தர்கள் இல்லையேல் பக்திநெறி மன்றம் இல்லையென்றும் கூறி னார். முன்னதாக திரு. ஸ்பால் அழகப்பன் இறைவணக்கம் பாடி னார்.

இக் கூட்டத்தில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், 'திரு நாவுக்கரசரும் - திருஞானசம்பந் தரும்' என்ற பொருளில் இலக் கிய உரையாற்றினார்.

திருமணம்

பாகனேரி திரு. லெ. பழ. இராமநாதன் செட்டியார் புதல்வி செல்வி நிர்மலாவுக்கும் நாட்ட ரசன்கோட்டை திரு. ஆத. வீர. கண்ணப்பச் செட்டியார் புதல் வன் செல்வன் கண்ணப்பன் B. A.க்கும் 27-3-89 அன்று பாகனேரியில் திருமணம் சிறப் பாக நடைபெற்றது.

கவிமணி மன்றம்

குருவிக்கொண்டான்பட்டி கவிமணி மன்றத்தின் சார்பாக 31 ஆம் ஆண்டு கவிமணி விழா 17-4-89 & 18-4-89 ஆகிய இரு நாட்கள் நடைபெற உள்ளது.

17-4-89 இரவு 8 மணி அளவில் புதுக்கோட்டை மின்வாரிய உதவி செயற் பொறியாளர் திரு. கேஎம். குமரப்பன் தொடக்கவுரையாற்ற, அகில பாரத ஐயப்ப சேவா சங்கத்தின் தமிழ்நாடு அமைப்புத் தலைவர் திரு. கேஆர். அண்ணாமலை வாழ்த்துரை வழங்குகிறார். அடுத்து 'ஒரு பெண்ணிற்குப் பெரிதும் பெருமை சேர்ப்பது பிறந்த வீடே, புகுந்த வீடே' என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நடைபெற உள்ளது டாக்டர் திரு. பூ சொல்விளங்கும் பெருமாள் நடுவர் பொறுப்பேற்க, 'பிறந்த வீடே' என்ற அணியில் திருமதி இரா. காந்திமதி, திருமதி இராசம் மரகதமும் 'புகுந்த வீடே' என்ற அணியில் திருமதி டாக்டர் சக்திபெருமாளும் திருமதி சி. எஸ். விசாலாட்சியும் பங்கேற்கிறார்கள்.

18-4-89 இரவு 10 மணி அளவில் மதுரை ஜீவன் சூப்பர் ஸ்டார் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மாசிக் கிருத்திகை விழா

பட்டமங்கலம் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவிலில் 12-3-89 மாசிக் கிருத்திகையன்று அன்னதான பூஜையும், மறுநாள் 13-3-89 அன்று ஏலமும் எட்டாம் நாளான 19-3-89 அன்று இடும்பன் பூஜையும், 21-3-89 அன்று சண்முகார்ச்சனை மற்றும் விளக்குப் பூஜையும் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் நகரத்தார் பெருமக்களும் நகரத்தார் இளைஞர் குழுவினரும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர்.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்



வி.என்.சிதம்பரம்

— 39 —

நியூயார்க்கிலிருந்து நாங்கள் மாலையில் புறப்பட்டோம். இரவு முழுவதும் என் மகன் ஒருவனே காரை ஓட்டிக்கொண்டு வந்தான். காலையில் நாங்கள் நயாகரா வந்து சேர்ந்தோம். நயாகரா நீர்வீழ்ச்சியினுடைய அழகை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. அவ்வளவு அழகு! நயாகரா நீர்வீழ்ச்சி கடல்போல் காட்சியளிக்கிறது. நீர்வீழ்ச்சியைச் சுற்றி நூற்றுக் கணக்கான கடைகள் உள்ளன. பக்கத்தில் பார்க்கும் அந்தப் பார்க்கில் பல சிலைகளும் உள்ளன. நீர்வீழ்ச்சியை அருகில் சென்று பார்ப்பதற்கு நம்மை மோட்டார் படகில் அழைத்துச் செல்கிறார்கள். நீர்வீழ்ச்சிக்குக் கிட்டத்தட்ட 1000 கெஜம் தூரத்திற்கு முன்னாலேயே மோட்டார் படகைத் திருப்பி விடுகிறார்கள். அதுவே மிகப் பயங்கரமான அனுபவமாக இருக்கிறது. அவ்வளவு வேகமாக நீர் கொட்டுகிறது. எங்கே அந்த நீர் நமது படகில் விழுந்து படகு கவிழ்ந்து விடுமோ என்ற உணர்வில் படகைத் திருப்புகிறார்கள். நீர்வீழ்ச்சியினுடைய சாரல் படகிலேயே அடிக்கிறது. படகில் செல்லும்



நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் திரு. வி என். சிடி வள்ளியப்பன்.

அனைவருக்கும் கோட்டுத் தருகிறார்கள். இந்த நீர்வீழ்ச்சியை உலக மக்கள் அனைவரும் கண்டு ரசிக்கின்றனர். அன்று இரவு நயாகராவிலேயே தங்கிவிட்டு மறுநாள் காலையில் புறப்பட்டு சிகாகோ வந்து சேர்ந்தோம்.

இரண்டு நாட்கள் சிகாகோவில் ஓய்வு எடுத்துக்கொண்டு விமானம் மூலம் சான்பிரான்ஸிஸ்கோ சென்றேன். விமான நிலையத்தில் என்னை வரவேற்பதற்காக கடியாபட்டி பி. கு நா. சக்திச் செட்டியார் பேரனும் திரு. ரத்தினம் அவர்களுடைய மகனுமான திரு. குமார் அவர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் இல்லத்தில் மூன்று நாட்கள் தங்கினேன். பி. கு. நா. சக்திச் செட்டியார் அவர்கள் புதுக்கோட்டையில் வசித்து வந்தவர்கள். அவர்கள் வீட்டிற்கு எதிரில் எங்கள் வீடு இருந்தது. நான் நான்காவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். விருந்தோம்பலில் சிறந்தவர்கள் சக்திச் செட்டியார் அவர்கள். அவர்களுக்கு ஸ்கௌட்டிலும் ஈடுபாடு அதிகம் உண்டு. நகரத்தார்களும் நகரத்தார் அல்லாதவர்களும் அவர்கள் இல்லத்திற்கு வந்து விருந்துண்டு செல்வதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். அவர்களுடைய மகன் திரு. ரத்தினம் அவர்கள் அப்போது என்னைவிட இரண்டு வகுப்பு அதிகம் படித்து வந்தார்கள். அவர்களது குடும்பத்தில் மூன்றாவது தலைமுறையினரான குமாரை அன்றுதான் விமான நிலையத்தில் சந்தித்தேன். குமார் பழகிய விதம் அவர்களது அய்யாவை அப்படியே நினைவுபடுத்தியது. குமாருக்குத் திருமணம் செய்தது அவரது அம்மான் மகளைத்தான். அவர்களது அம்மான் கானாடுகாத்தான் கும. சித. முருகப்ப செட்டியாரின் மகன் நாராயணன் செட்டியார் ஆவார்கள். நாவன்ற அவர்களும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணியாற்றுகின்றார்கள். அவர்களும் எனது நெருங்கிய நண்பர். ஆகவே மூன்று நாட்களும் அவர்கள் இல்லத்தில் அன்பு மழையில் நனைந்தேன். வேலை முடிந்து வந்ததும் குமார் எனக்கு ஊர் சுற்றிக் காண்பிப்பார். அவர் வேலைக்குப் போன நேரத்தில் திருமதி குமார் ஊரைச் சுற்றிக் காண்பிப்பார்.

சான்பிரான்ஸிஸ்கோ நகரம் நமது பள்ளத்தூரைப் போல இருக்கும். பள்ளத்தூரில் வீதிகள் ஒன்றுக்கொன்று இறக்கமாக இருக்கும். அதேபோல் அமைப்புடன் சான்பிரான்ஸிஸ்கோ நகரம் இருக்கிறது. சான்பிரான்ஸிஸ்கோவில் கேபிள்கார் என்று சொல்லக்கூடிய டிராம் வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. பூமிக்கு அடியில் மின்சார இரயிலும் ஓடுகிறது. ஏரியில் படகில் செல்லலாம். அங்கு சைனா டவுன் என்று ஒரு பகுதி தனியாக இருக்கிறது. அங்கு சைனர்கள் அதிகம் உள்ளனர். சீன உணவு சாப்பிடுவதற்காகப் பலர் அந்தப் பகுதிக்கு வருகிறார்கள்.

சான்பிரான்ஸிஸ்கோவில் மட்டும் ஒரு இலட்சம் சீனர்கள் வசிக்கிறார்கள். சைனா டவுன்போல ஜப்பான் டவுனும் அருகிலேயே இருக்கிறது. அங்கு ஜப்பானியர்களும் அதிகம் வசிக்கிறார்கள் -சீக்கியர்களும் வசிக்கிறார்கள். இங்கு மட்டும் பலநாட்டு மக்கள் வசிக்கிற காரணத்தைக் கேட்டபோது 200 ஆண்டுகளுக்கு முன்பு சான்பிரான்ஸிஸ்கோ பகுதியில் தங்கம் இருப்பதாக ஒரு செய்தி பரவியதை அடுத்து மேலை நாடுகளிலிருந்து வெள்ளையர்கள் தங்கத்தைத் தோண்டி எடுக்க வந்தார்களாம். அப்பொழுது அவர்களுக்கு உதவியாக வேலை செய்வதற்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் அழைத்து வரப்பட்டவர்களே அங்கு குடியேறியவர்கள் என்று சொல்லப்படுகிறது. சைனா டவு

னில் மெழுகு பொம்மைகள் உள்ள கண்காட்சிக் கூடம் இருக்கிறது. அதில் சீன கலாசாரத்தைப் பின் பற்றி மெழுகு பொம்மைகளை அமைத்திருக்கிறார்கள். உலகிலேயே மிக நீளமான தொங்கு பாலம் இங்குதான் இருக்கிறது. அதனுடைய நீளம் 4200 அடி. 'கோல்டன் கேட்' என்று அதற்குப் பெயர். 400 ஆண்டுகளுக்கு முன்பு சர் பிரான்சிஸ் டிரேக் என்பவர் அந்தப் பகுதிக்கு வந்தாராம். அவர் கப்பலில் வந்த மாதிரியும் அவரோடு வந்தவர்களையும் பொம்மைகளாகச் செய்து ஒரு கப்பலையும் அங்கு நினைவுச் சின்னமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். கோல்டன் கேட் அருகே ஒரு பூந்தோட்டம், மியூசியம் ஆகியவை உள்ளன. அவைகளையெல்லாம் பார்த்துவிட்டு அங்கிருந்து விமானம் மூலம் லாஸ் ஏஞ்சல்ஸ் புறப்பட்டேன்.

(வளரும்)

பட்டமங்கலத்தில் பங்குனித் திருவிழா

பட்டமங்கலம் ஸ்ரீ மதியாத கண்ட விநாயகர் ஸ்ரீ மதியழகு சௌந்தரி அம்பாள் கோவிலில் 13-3-89 அன்று நடைபெற்ற பூச்சொரிதலைத் தொடர்ந்து 14-3-89 அன்று காப்புக்கட்டி 23-3-89 வரை 10 நாட்கள் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. திருவிழாவில் நகரத்தார் இளைஞர் குழுவின் ஏழாம் ஆண்டு விழாவை முன்னிட்டு ஏழாம் நாளான பால்குடத்தன்று தண்ணீர் பந்தலும், எட்டாம் நாள், விஷேச முறையில் ஜெபம் செய்து அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகளும், ஒன்பதாம் நாளான தேர்த்திருவிழாவன்று பன்னீர் அபிஷேகமும், இரவு திரைப்படமும், பத்தாம் நாளான பூப்பல்லக்கு அன்று சிறப்பு மேளமும் நடந்தது.

தீர்த்தார்குளம் தேசிகவிநாயகர் கோயில் திருக்குட நன்னீராட்டு விழா!

நாட்டரசன்கோட்டையில் தொன்மை மிகுந்து விளங்குவது தீர்த்தார்குளம் அருள்மிகு தேசிக விநாயகர் கோவில். இது சூரக்குடி நகரத்தார்களுக்குச் சொந்த மானது. முத்துக்குட்டிப் புலவர் கண்ணுடையம்மன் பள்ளின் முதற் செய்யுளில் 'வடதிசைவளர் தேசிக விநாயகர்' துணையால் அப்பள்ளு நூலினைப் பாடத் தொடங்குவதாகக் குறிப்பிடுவதினின்றும் இப்பெருமான் பெருமை இனிது புலனாகும். இவ்வாலயத்தின் திருக்குட நன்னீராட்டு விழா 60 ஆண்டுகட்குப் பின்னர், வருகின்ற சித்திரைத் திங்கள் 18 ஆம் நாள் 1-5-1989 திங்கட்கிழமை காலை 7 மணி முதல் 7-30 மணிக்குள் நிகழவிருக்கின்றது. அன்றே இந்நகர்க்கண் அமைந்துள்ள கண்ணுடையநாயகி அம்மன் திருக்கோயிலுக்கும் காலை 9-30 மணி அளவில் திருக்குட நன்னீராட்டு நிகழவிருக்கின்றது இந்நகர்க்குரிய இலக்கியமாம் கண்ணுடையம்மன் பள்ளிற்கு முழுமுதற் காரணமான கண்ணுடைய நாயகி அம்மனுக்கும், அவ்வம்மை மீது பள்ளிசை பாடத் துணையென நின்ற தேசிக விநாயகர்க்கும் ஒரு பெரும்நாளில் திருக்குட நன்னீராட்டு நிகழ்வது குறிப்பிடத்தக்க தெய்வீகத் திருவிழாவாகும்.

நிகழ்முறை

28-4-89 (சித்திரை மீ 15௳) வெள்ளி காலை 4-45 மணி முதல் 5-30 மணிக்குள் கடஸ்தாபனம்; யாகசாலைப் பிரவேசம். மாலை யாக சாலை முதற்காலம்.

29-4-89 (16௳) சனி காலையும் மாலையும் யாகசாலைப் பூஜை.

30-4-89 (17௳) ஞாயிறு காலையும் மாலையும் யாக சாலைப் பூஜை.

1-5-89 (18௳) திங்கள் அதிகாலை ஆறும் கால யாகசாலைப் பூஜை பூராணகுதி. காலை 7 மணி முதல் 7-30க்குள் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம். இரவு 8 மணிக்கு வெள்ளி மூஷிக வாகனத்தில் தேசிக விநாயகர் திருவீதி உலா.

பசு புண்ணியமும் பதி புண்ணியமும்!

ஒருவர் பள்ளிக்கூடம் ஒன்றைக் கட்டினுர் என்ருல், அதைக் கட்டியதின் புண்ணியம் அவரைச் சேரும்; அந்தப் பள்ளிக்கூடத்தில் பயில்பவர்கள் கல்வி வசதி பெறுவார்களே தவிர அவர்களுக்குப் புண்ணியம் ஏதும் கிடைக்கப்போவதில்லே. அதுபோல் ஒருவர் மருத்துவ மனே ஒன்றைக் கட்டினுர் என்ருல், அதைக் கட்டியதின் புண்ணியம் அவரைச் சேரும்; அந்த மருத்துவ மனேயில் சிகிச்சை பெறுபவர்கள் உடல் நலம் பெற்றுத் திரும்பும் நன்மையை அடைவார்களே தவிர அவர்களுக்குப் புண்ணியம் ஏதும் கிடைக்கப்போவதில்லே. ஆனுல் ஒருவர் கோயில் ஒன்றைக் கட்டினுர் என்ருல் கோயில் கட்டியதின் புண்ணியம் அவரைச் சேரும்; அத்துடன் அந்தக் கோயிலுக்குச் சென்று வழிபடும் பக்தர்களுக்கும் புண்ணியம் கிடைக்கும். கோயில் ஒன்றைக்கட்டினுல் கட்டியவருக்கும் புண்ணியம்; வழிபடுபவருக்கும் புண்ணியம். பள்ளிக்கூடம் கட்டுதல், மருத்துவமனே கட்டுதல் போன்ற அறப்பணிகளேச் செய்வதால் கிடைக்கும் புண்ணியத்தைப் 'பசு புண்ணியம்' என்றும் கோயில் கட்டுதல் போன்ற திருப்பணிகளேச் செய்வதால் கிடைக்கும் புண்ணியத்தைப் 'பதி புண்ணியம்' என்றும் பெரியோர் குறிப்பிடுவர்.

—அள. சித சொ. தெ. சொக்கலிங்கம்
காரைக்குடி.

குழந்தைக் கவிஞருக்கு கான்பூரில் பாராட்டு

உத்தரப் பிரதேசத்திலுள்ள கான்பூரில் இயங்கும் குழந்தைகள் நலச் சங்கத்தின் சார்பில் 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்களுக்கு 26-2-89 அன்று அவரது குழந்தை இலக்கியப் பணிக்காகப் பாராட்டு நடைபெற்றது. கான்பூர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் விஷன் நாராயண் ஆஸ்தானு, திரு. வள்ளியப்பாவுக்குக் கேடயம் வழங்கி, ரூபாய் ஐந்நூறும், கம்பளிச் சால்வையும், சான்றிதழும் வழங்கினர்.

காலையில் திரு. கிரிராஜ் கிஷோர் தலைமையில், 'அம்புலி மாமா' ஆசிரியர் திரு. எஸ். சுவாமிநாதன் முன்னிலையில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இக் கருத்தரங்கில் குழந்தை நூல் வெளியீட்டில் உள்ள பிரச்சினைகள் குறித்து, இந்தியாவில் பல பகுதிகளிலிருந்தும் வந்த குழந்தை எழுத்தாளர்கள் பேசினர்.

விழாவில் திரு. வள்ளியப்பா தான் இயற்றிய சில குழந்தைப் பாடல்களைப் பாட, திரு. எஸ். சுவாமிநாதன் அவற்றை இந்தியில் மொழி பெயர்த்துக் கூற, அவையோர் மகிழ்ந்தனர்.

கோவை பள்ளியின் ஆண்டு விழா


கோவை நகரத்தார் எஜுகேஷன் டிரஸ்ட் நடத்தி வரும் பிருந்தாவன் வித்யாலயா மெட்ரிகுலேசன் பள்ளியின் ஆண்டுவிழா மாவட்ட ஆட்சித் தலைவர் என் கோவிந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பள்ளித் தாளாளர் திரு. எஸ். பழநியப்பன் வரவேற்புரை நல்க, முதல்வர் திரு. கோவிந்தசாமி ஆண்டறிக்கை வழங்கினர். பள்ளியின் மற்றொரு தாளாளர் கவிஞர் திரு. செல்லகணபதி விருந்தினர்களை அறிமுகப்படுத்திப் பேசினர்.

ஒழுக்கத்தைப் போதிக்கும் வகையில் இப்பள்ளியில் வகுப்புகள் நடத்தப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் பாராட்டிப் பேசினர்.

கோவை வேளாண்மைக் கல்லூரியின் தலைவர் டாக்டர் எஸ்பி. பழநியப்பன் தம் சிறப்புரையில் அறிவியல் அறிவைப் போதிக்கும் அவசியத்தை வலியுறுத்தினர்.

திருமதி தேன்மொழி கோவிந்தன் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்.

பள்ளி மாணவர்கள் நடத்திய கலைநிகழ்ச்சி பார்வையாளர்களின் செஞ்சைக் கவர்வதாக அமைந்திருந்தது



புலவர்மாமணி திரு. மா. முத்துராமனின் புதல்வி செல்வி மாணிக்கவல்லி என்ற சாந்தி B. Com., க்கும் மேலைச்சிவபுரி திரு. சொ. சண்முகம் செட்டியாரின் புதல்வன் செல்வன் சொக்கலிங்கம் D. M. E. க்கும் மேலைச்சிவபுரியில் 10-2-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

புலவர்மாமணி இல்லத் திருமண விழாவில்......

புலவர்மாமணி மா. முத்துராமனும் நானும் 20 ஆண்டுகளாக நண்பர்கள் 1974ல் வள்ளுவர் மன்ற மேடையில் முதன் முதலில் என்னைப் பேச அழைத்தவர் அவர். அதனை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன்.

- வி என். சிதம்பரம் செட்டியார்

எல்லாப் பொருளும் மேலிருந்து கீழே விழும். ஆனால் நெருப்பு மட்டும் கீழிருந்து மேலே போகும். அதனால்தான் வலம் சுழித்துச் செல்லும் அக்கினியைச் சாட்சியாய் வைத்துத் திருமணங்கள் நடைபெறுகின்றன.

படித்து முன்னுக்கு வந்தவர் மணமகளின் தந்தை புலவர் மாமணி. உழைத்து முன்னுக்கு வந்தவர் மணமகனின் தந்தை திரு சொ. சண்முகம் செட்டியார்.

— முனைவர்
— சரசுவதி இராமனாதன்

மேலைச்சிவபுரி என்றதும் பண்டிதமணி நினைவு வரும் அப்போது. இப்போது புலவர்மாமணியின் நினைவு எங்கட்கு வருகிறது.

எந்த மேடையில் பேச வந்தாலும் உடனடியாக யாவரும் பாராட்டும் வண்ணம் பேசுவதனால் திரு வி. என். சிதம்பரம் செட்டியாரவர்களை ''புலவர் வி. என். சிடி'' என்றே அழைக்கப் பிரியப்படுகின்றேன்.

எப்போது மனிதன் சிரிக்கிறானோ- அன்று தான் அவன் வாழக் கற்றுக் கொள்கின்றான் என்று பொருள்.

- அரு. சோமசுந்தரன்

வானம் கறுத்து மழை பெய்யவில்லை என்பதால் கவிஞர்கள் கருத்து மழை பெய்ய வந்தோம்.

என் பணி மின்சாரம்; கவிதை என் சம்சாரம்

- சேது அருணாசலம்

அ.நு. சோமசுந்தரன் என் ஆசிரியர் ஆதலால், குரு சோமசுந்தரம் என்று வணங்குகின்றேன்

மிதியடியின்றி மேலைச்சிவபுரி வந்தேன் பண்டிதமணி பாதம் பட்ட சிவபுரியை மிதியடி கொண்டு மிதிக்க மனம் வரவில்லையே.

- சபா. அருணாசலம்

ஆதியிலே வந்த நான் பாதியிலே வருகிறேன். ஏதும் மீதியின்றி மேலான கவிதை பாடுகின்றேன்.

- நா. மீனவன்

உறவுச் சம்பந்தம் உயர்வைத் தரும். ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்ள உதவும்.

- T. குமரப்பன்

மேலைச்சிவபுரியில் நம் கால் பட்டுவிட்டால் தமிழ் ஒட்டிக் கொள்ளும்; இவ்வூர்க் காற்று நம் மீது அடித்தால் தமிழ் உணர்வு ஏழேழு ஜென்மத்திற்கும தொடர்ந்து வரும்.

காஞ்சிபுரமும் மேலைச்சிவபுரியும் ஒன்று என்பேன். கணிகண்ணன் எனும் புலவர் பின்னால் நாடாளும் மன்னர் நடந்து சென்றார் காஞ்சியிலே. பண்டிதமணி வண்டியிலே வருகிறார். அதன் பின்னால் காரிலே வந்த கருமுத்துத் தியாகராசச் செட்டியார் காரை விட்டு இறங்கி தொடர்கிறார் பண்டிதமணியை வண்டியை ஓட்டுபவரோ வண்டிக்குள் இருக்கும் பண்டிதமணியோ இவரைப் பார்க்கவில்லை. இவரோ கூப்பிட்டால் மரியாதை இல்லை என்று வெகுதூரம் பண்டிமணியைத் தொடர்ந்து மேலைச்சிவபுரியை நோக்கி நடந்து வந்தாராம். ஆதலால் காஞ்சிக்குச் சமம் மேலைச்சிவபுரி என்பேன்.

- சொ. சொ. மீ. சுந்தரம்

திருப்பூட்டுதற்கு முன்பு திருத்தாலியை ஒரு தாம்பாளத்தில் வைத்து அனைவரிடமும் காண்பிக்கிறோம். ஒவ்வொருவரும் அதனைத் தொட்டு வணங்குகின்றனர். அதன் பொருள் "இறையருளால் மணமக்கள் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ்க வாழ்க" என்பதுவே ஆகும். நகரத்தாரின் சிறந்த பழக்க வழக்கங்களில் இதுவும் ஒன்றாகும்.

- மா. முத்துராமன்

('புலவர்மாமணி' மா முத்துராமனின் புதல்வி மாணிக்கவல்லி என்ற சாந்தி B. Com. க்கும் திரு. சொ. சண்முகம் செட்டியாரின் புதல்வன் சொக்கலிங்கம் D M E. க்கும் 10-2-89 அன்று மேலைச் சிவபுரியில் திருமணம் நடைபெற்ற போது ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வாழ்த்தரங்கில் கேட்ட நல்மணிகள் இவை)

தேவகோட்டை திருச்செந்தூர் பாதயாத்திரை

தேவகோட்டையில் இருந்து திருச்செந்தூருக்கு 13ஆம் ஆண்டாகப் பாதயாத்திரை 13-4-89 அதிகாலை 5-45 மணிக்குப் புறப்படுகிறது. அக் குழுவினர் காளையார் கோயில், பரமக்குடி, முதுகுளத்தூர் சாயல்குடி, வைப்பார், தூத்துக்குடி, ஆத்தூர் ஆகிய ஊர்களில் தங்கி எட்டாவது நாள் 20-4-89 சித்திரா பௌர்ணமி அன்று காலை 8 மணிக்குத் திருச்செந்தூர் சென்று மாலையில் காவடி, பாற்குடங்கள் செலுத்தப் பெறும் என்று அமைப்பாளர்கள் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், 'திருத்தொண்டர்' திரு. ஆர் வயிரவன் ஆகியோர் அறிவிக்கின்றனர்.

வழிகாட்டியவர்கள்

அன்னச் சத்திரம், கல்விச் சாலை, பசுமடம், நந்தவனம் போன்ற தர்மங்களை முதலில் ஏற்படுத்தி நமக்கு வழிகாட்டியவர்கள் திருநாவுக்கரசு சுவாமிகள்.

அருளும் பொருளும்

அருள் ஆபத்தை நீக்கும். பொருள் கஷ்டத்தை நீக்கும்; நாம் கஷ்டத்தை நீக்கும் பொருளை அதிகமாகத் தேடுகிறோம். அருள் ஆகர்ஷண சக்தி உடையது.

தேடல்

இரவுக்கு வேண்டியதை பகலில் தேடிக்கொள்; முதுமைக்கு வேண்டியதை இளமையில் தேடிக்கொள்; மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக்கொள்.

புதுமையும் பழமையும்

எதிலும் புதுமை செய்ய விரும்பினால் 100 முறை சிந்தித்துச் செய்ய வேண்டும்; பழைய காரியங்களைச் சிந்திக்காமலேயே செய்யலாம்.

—''காசிஸ்ரீ''
அரு. சோமசுந்தரன்

(நகரத்தார் பக்தி நெறி மன்றக் கூட்டத்தில்)

சிதம்பரம் நகரத்தார் சங்கத்தில் முப்பெரும் விழா

சிதம்பரம் நகரத்தார் சங்கத்தின் சார்பில் 5-3-89 அன்று "குடும்ப முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிப்பது ஆச்சிமார்களா? செட்டியார்களா?'' என்னும் தலைப்பில் பட்டிமன்றமும் ஓட்டப் பந்தய வீரர் திரு. ரெ. ஆனந்தநடராஜனுக்குப் பாராட்டும் கலை நிகழ்ச்சிகளும் சிறப்புற நடைபெற்றன.

பட்டிமன்றத்திற்கு திரு. அழ. பழநியப்பன் நடுவராகவும், மூனாவர் திரு. முத்துவீரப்பன், திரு. இராம. செந்தாமரை ஆகியோர் அணித் தலைவர்களாகவும் இருந்தனர். திருமதி அண. வள்ளியம்மை ஆச்சி, திருமதி நா. விசாலாட்சி, செல்வன் நா. அழகப்பன், செல்வன் சு. செந்தில்நாதன் ஆகியோர் வாதிட்டனர்.

உலகப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான ஓட்டப் பந்தயப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்று நம் நாட்டிற்கும், நம் இனத்திற்கும் பெருமை சேர்த்திருக்கும் செல்வன் திரு. ரெ. ஆனந்தநடராஜனை பேராசிரியர்கள் வீர. முத்துவீரப்பன், அரு. இலக்குவன், செயலர் அரு. இராமநாதன் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

நம் இளைய தலைமுறையினர் வழங்கிய நாட்டியம், பலகுரல், இசை, நாடகம் ஆகியனவும் நடைபெற்றன.

'செட்டிநாடு சிட்பண்ட்ஸ்' திறப்பு விழா!

செட்டிநாடு சிட்பண்ட்ஸ் நிறுவனத்தின் திறப்பு விழா திருச்சி தில்லை நகரில் 10-3-89 வெள்ளியன்று சிறப்பாக நடைபெற்றது இயக்குனர்களில் ஒருவரான திரு. ஏ. வி. கே. ஆவிச்சி செட்டியார் அனைவரையும் வரவேற்றார்.

தொழிலதிபரும், அரிமா சங்கத்தின் முன்னாள் ஆளுநருமான திரு. எஸ்பி. காசிச் செட்டியார் குத்துவிளக்கேற்றி நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார்.

விழாவிற்கு கூடுதல் மாவட்ட நீதிபதி திரு. எம். சொக்கலிங்கம் தலைமை ஏற்றார். அவர் தனது தலைமை உரையில் நகரத்தார்கள் நாணயத்திற்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர்கள் எனவும். 'செட்டிநாடு' என்ற பெயரிலேயே இயங்க இருக்கும் இந்த நிறுவனம் மிகவும் சிறந்து விளங்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்து வாழ்த்தினார்.

திரு. எஸ்பி. காசிச் செட்டியார் பேசும்போது இந்த நிறுவனத்தைத் தொடங்கியிருப்பவர்கள் அனைவரும் அவரவர்களது துறையிலேயே சிறந்து விளங்குபவர்கள் என்றும் அவர்களை நம்பி அனைவரும் தாராளமாக இந்த நிறுவனத்தில் சேரலாம் எனவும் கூறினார்.

பின்னர் அரிமா சங்க ஆளுனர் கல்கி G R. வரதராஜுலு இந்தியன் வங்கி உயர் மண்டல மேலாளர் திரு. எஸ்டி. சுப்பையா இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மண்டல மேலாளர் திரு. எம். ராமநாதன் பொறியாளர் திரு. நாகப்பன் காசி நகரச் சத்திர மேலாண்மைக் கழகத் தலைவர் திரு. எஸ்பி. சண்முகம் செட்டியார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. எஸ். அண்ணாமலை இந்த நிறுவனத்தின் நோக்கங்களையும் செயல் முறைகளையும் விளக்கிக் கூறினார்.

நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவரான திரு. எஸ்பி. அருணாசலம் நன்றி கூறினார்.

மற்றொரு இயக்குனரான திரு. எல். என். லெட்சுமணன் விழா நிகழ்ச்சிகளை சுவைபடத் தொகுத்து அளித்தார்.

(இந்த நிறுவனத்தின் ஆறு பங்குதாரர்களில் நால்வர் திருச்சி நகரத்தார் சங்கத்தின் முனனாள் தலைவர்கள் என்பதும் மற்றும் இருவர் தற்போதைய தலைவரும், செயலாளரும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.)

வாசகரின் வேண்டுகோளுக்குப் பதில்

சென்ற இதழில் கோட்டையூர் திரு கு லெட்சுமணன், நம்மவர்களுக்கு பெயர்களின் முன்னால் ஒன்றுக்கு மேற்பட்ட இனிஷியல் தேவையில்லை, என்ற கருத்தை எழுதியுள்ளார் அவரது கருத்து ஏற்கக் கூடியதாய் இல்லை. காரணம் நமது குலப் பெருமைக்கு. ஒன்றுக்கு மேற்பட்ட இனிஷியலும் ஒரு காரணம். வேறு எந்த இனத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட இனிஷியல் உள்ளதா என்றால் நிச்சயமாக இல்லை. அந்தப் பேறு பெற்றவர்கள் நம்மவர்கள் மட்டுமே. உதாரணமாக, மற்றவர்களுக்கு நம்மை இன்னார் என்று அடையாளம் காட்டுவதற்கு இனிஷியல் பெருமளவு உதவுகிறது. ஒருவரின் பெயரை ஒரு இனிஷியலுடன் அதாவது P. சண்முகம் என அழைப்பதற்கும் PL. சண்முகம் என அழைப்பதற்கும் என்ன வேறுபாடு; பெருமை! எனவே, ஒன்றுக்கு மேற்பட்ட இனிஷியல் இடுவதால் தொல்லையோ குழப்பமோ இல்லை. அது பெருமைதான்; இனிமைதான்.

—பழ. வள்ளியப்பன்
தஞ்சாவூர்



ஆரடித்தார் ஏனழுதாய்?

ஆரடித்தார் ஏனழுதாய்
அடித்தாரைச் சொல்லியழு
கண்ணே என் கண்மணியே
கடிந்தாரைச் சொல்லியழு
விளக்கிலிட்ட வெண்ணெய்யைப்போல்
வெந்துருகி நிற்கையிலே
கலத்திலிட்ட சோறதுபோல்
கண்கலக்கம் தீர்த்தாயே!
கொப்புக் கனியே
கோதுபடா மாங்கனியே!
வம்புக் கழுதாயோ
வாயெல்லாம் பால்வடிய!
மாமன் அடித்தானோ
மல்லிகைப் பூச் செண்டாலே!
அத்தை அடித்தாளோ
அல்லிமலர்ச் செண்டாலே!
அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்துவைப்போம்
தொட்டாரைச் சொல்லியழு
தோள் விலங்கு போட்டு வைப்போம்
வெண்ணெய்யால் விலங்குபண்ணி
வெய்யிலிலே போட்டு வைப்போம்
மண்ணால் விலங்குபண்ணித்
தண்ணீரில் போட்டுவைப்போம்

அனுப்பியவர் :
மெ. அழகம்மை, B. Sc., M. Ed.
மானகிரி

பெருமைக்குரிய ஆச்சிமார்களே! உங்களது தாலாட்டுப் பாடல்களை, தாலாட்டுப் பகுதி '' நகரத்தார் குரல் '' 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001 என்ற முகவரிக்கு அனுப்பி உதவுங்கள். அது பலருக்கும் பயன்படட்டும்.

காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் நற்பணிகள்

பேராசிரியர் இராம. சிவசுப்பிரமணியன்

காசி முதல் கன்னியாகுமரி ஈறாக நம் சமூகத்தினர் யாத்திரைக் காலங்களில் தங்குவதற்கென ஆங்காங்கு நகர விடுதிகளை அமைந்திருப்பது உலகறிந்த செய்தி. அந்நகரச் சத்திரங்களில முதன்மை சான்றது காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம். அச்சத்திரத்தினை மையமாகக் கொண்டு நிறுவப் பெற்றுள்ள 'காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகம்' சென்ற 1986 முதல் நாளது தேதி வரை ஆற்றி வந்திருக்கின்ற அரும்பணிகள் பாராட்டத் தக்கவை.

கோவிலூரில் 27-1-89 அன்று நடைபெற்ற இக்கழகத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் வெளியிடப் பெற்ற ஆண்டறிக்கையின் வாயிலாக இக்கழகம் ஆற்றிய அளப்பரும் பணிகளையும், அதன் நிதி நிலை உயர்வையும் அறிந்து நாம் இறும்பூது எய்துகின்றோம். இவற்றிற்கெல்லாம் காரணம் இச் செயற்குழுவின் நிர்வாகச் சிறப்பே ஆகும்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்பது செயல் பாட்டின் சிறப்பை விளக்கும் அருமைக் குறளாகும். அந்நெறியில் நம் நகரத்தார் பெருமக்கள் தக்காரிடம் தலைமைப் பொறுப்பை ஒப்பித்துச் செயற்பாடுகளைத் தீவிரம் ஆக்குவதில் வல்லவர்கள். அவ்வகையில், சென்ற முறை இக்கழகத்தின் தலைவராக இருந்தவர்கள் எங்கள் கல்லூரி நிறுவனர், செயல்வல்லுநர், உ. ராம. மெ. சுப. சேவு. அண. அண்ணாமலை செட்டியார் அவர்கள் ஆவார்கள். அவர்கட்கு உறுதுணையாக இருந்த செயலர் சுப. சண்முகம் செட்டியார் அவர்களும் நமது போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்கள் ஆவார்கள். அப்பெருமக்கள் தம் அரிய முயற்சியால் காசி நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் நிதியைப் பரவலாகப் பயன்படுத்தி நமக்குச் செய்திருக்கின்ற நன்மைகள் பலப்பல. அவ்வளவையும் சுட்ட வேண்டுமென்பதில்லை.

நம் தமிழகத் தலைநகராம் சென்னையில் பவளக்காரத் தெரு ரெங்கோன் நகரவிடுதியில் அவர்கள் பெருக்கி இருக்கின்ற வசதிகள் பற்பல. அவ்வசதிகளை அங்கே சென்று அனுபவித்தவர் அறிவர். தங்கும் அறைகள் குளியலறைகள் கழிப்பறைகள் மின்விசிறி, பாதுகாப்புப் பெட்டிகள் இன்னபிற வசதிகளையெல்லாம் சிறப்பாகச் செய்திருக்கின்றனர். இதுவே போலக் காசியிலும் பழுதுகளையெல்லாம் பார்த்து வசதிகளைப் பெருக்கி இருக்கின்றனர். இன்னும் பிரயாகை, அயோத்தி, கயா முதலிய புண்ணியத் தலங்களில் பழுதுற்றுக் கிடந்த நம் நகரவிடுதிகளையெல்லாம் புதுப்பொலிவு பெற்று விளங்கச் செய்திருப்பது பாராட்டுவதற்குரியது. ஏறத்தாழ 30 திருமணங்கள் நம் மேலாண்மைக் கழகத்தின் நிதி உதவியால் நிகழ்ந்திருக்கின்றன. பெண் வீட்டார் ஒவ்வொருவரும் ரூபாய் 3500/- வீதம் நிதி உதவி பெற்றுத் தம் பெண்ணுக்கு வாழ்வளித்துள்ள செய்தி மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகும். இன்னும் தொழில் நுட்பக் கல்விக்கும், தொழிற்கல்விக்கும், உயர்கல்விக்கும் நிதி உதவி ஊக்கம் அளிக்கும் நமது கழகத்தை நாம் போற்றத்தான் வேண்டும்.

இவையெல்லாம் உலகியலில் நம் உயர்வுக்கு நம்கழகம் ஆற்றிய

அரிய சாதனைகள், இவை போக ஆன்மீக வழியில் நம்இனம் உய்ய' காசி விடுதியிலுள்ள நகரேசுவரர் கோவிலிலும், காசி நகரிலுள்ள விசுவேசுவரர் கோவிலிலும் நமது கட்டளைகள் சீரும் சிறப்போடும் நடைபெற்று வருகின்றன.

'தர்மம் தலை காக்கும்' என்பது நாம் அறிந்த பழமொழி. அத்தர்மத்தை தமது அரிய பணிகளால் போற்றிப் புரந்த நம் அருமை அண்ணல், சேவு, அண்ணாமலையார் அரவணைப்பில் நம்கழகத்தின் நிதி நிலையும் முன்பிருந்ததற்கு மேல் பல இலட்சமாகப் பெருகியிருக்கிறது என்பதையும் நாம் உள்ளன்போடு பாராட்டி மகிழ்கிறோம். இவ்வழியைப் பின்பற்றி நமது புதிய செயற்குழுவும் நமது சமூக வளர்ச்சிக்கு அரிய பணிகள் ஆற்ற காசி விசுவேசர் விசாலாட்சி அருள்புரிவார்களாக.

பம்பாய் பண்பாட்டுக் கழகத்தின் கூட்டம்

பம்பாய் நகரத்தார் சமுதாயப் பண்பாட்டுக் கழகத்தின் கூட்டம் 25-2-89 அன்று அந்தேரி அருகில் உள்ள பவாய் தோட்டத்தில் நடைபெற்றது. உறுப்பினர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். உறுப்பினர்களின் சுய அறிமுகத்தை தலைவர் திரு. கே எம். வெங்கடாசலம் தொடங்கி வைத்தார். இணைச் செயலாளர் திரு. எஸ்பி. அண்ணாமலை மேற்பார்வையில் மதிய உணவு பரிமாறப்பட்டது. விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அண்மையில் மகாராட்டிர அரசால் தியாகி எனப் பட்டம் பெற்ற சங்கத்தின் துணைத் தலைவர் திரு. ஆர். மெய்யப்பனை டாக்டர் திரு எஸ். வைத்தியநாதன் பாராட்டிப் பேசினார்.

பாட்டுக்கு ஒரு தலைவன்!

கண்ணதாசன், நினைத்தாலே இனிக்கின்ற ஒரு அற்புதக் கவிஞன். நம்மினத்தில் பிறந்து இன்றும் என்றும் நமக்குப் புகழைச் சேர்க்கும் பாட்டுத் தலைவன். அவனின் பாடல்கள் மூவாயிரத்துக்கு மேலாம். அள்ள அள்ளக் குறையாத தெள்ளுதமிழ்ப் பாடல்கள் அவை. அவன் பாடாத பொருள் எது, சொல்லாத கருத்து என்ன. என்றால் சிந்திப்பின் முடிவில் தொக்கி நிற்பது வினக்குறி ஒன்றே!



ஒரு பாடலில் மாந்தரைப் பற்றிப் பாடும் போது—

''பூப் போன்ற நெஞ்சினிலும்
முள்ளிருக்கும் பூமியடா
பொல்லாத கண்களடா
புன்னகையும் வேஷமடா
நன்றிகெட்ட மாந்தரடா
நானறிந்த பாடமடா
பிள்ளையாய் இருந்து விட்டால்
இல்லை ஒரு தொல்லையடா''

என்கின்றான் கவிஞன்.

பிரிதொன்றில்—

''கொடி அசைந்ததும்
காற்று வந்ததா
காற்று வந்ததும்
கொடி அசைந்ததா''

எனக் கேட்டு நம்மைச் சிந்திக்க வைக்கிறான்.

கணவன், மனைவியின் அன்பைப் பற்றிப் பாடும் போது—

''ஒருவரை ஒருவர் உணர்ந்து
கொண்டால்
உள்ளத்தை நன்றாய்ப் புரிந்து
கொண்டால்''

என்ற கணவனின் கேள்விக்கு—

''இருவர் என்பதும் மாறிவிடும்
இரண்டும் ஒன்றாய்க்
கலந்து விடும்''

என மனைவி கூறுவதாக இயற்றி நம்மை அயர வைக்கிறார்.

பிரிதொன்றில்—

''ஆயிரம் பெண்மை மலரட்டுமே
ஆயிரம் கண்கள் ரசிக்கட்டுமே
ஒருத்தியின் நெஞ்சம் ஒருவனுக்
கென்றே
சொல் சொல் சொல்-தோழி!''

என ஒருவனுக்கு ஒருத்தி என்ற தத்துவத்தை அற்புதமாகச் சொல்கின்றான் அக் கவிஞன்.

உலகைப் பற்றிப் பாடும்போது—

''யாரைத்தான் நம்புவதோ
பேதையின் நெஞ்சம்
அம்மம்மா பூமியிலே யாவும்
வஞ்சம்''

என அரற்றுகிறான்.

இவ்வாறு அவன் பாடல்கள் எத்தனையோ. அத்தனையும் முத்துக்கள். அவை என்றென்றும் நமக்குச் சொத்துக்கள்.

-பழ. வள்ளியப்பன்
தஞ்சாவூர்

கண்ணுக்குத் தெரிந்த இந்த உலகிற்குச் சேவை செய்வதோடு கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்கும் சேவை செய்.

- ஸ்ரீ சுவாமி சிவானந்தர்

குழந்தைக் கவிஞர் இயற்கை எய்தினர்

'குழந்தைக் கவிஞர்' என எல்லோராலும் அன்புடன் அழைக்கப் பெற்ற அழ. வள்ளியப்பா அவர்கள் 16-3-89 வியாழன் காலை 8-30 மணிஅளவில் மதுரையில் இயற்கை எய்தினர்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


சில தினங்களுக்கு முன்பு மதுரை வந்த வள்ளியப்பா அவர்களுக்கு இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள். இடையில் சிறுநீரகக் கோளாறும் ஏற்பட்டது. மருத்துவர்கள் தீவிரச் சிகிச்சை மேற்கொண்டும் பலன் அளிக்காமல் அவர்கள் இயற்கை எய்தினர்கள்.

குழந்தைக் கவிஞரது பூத உடல் அவரது சொந்த ஊரான இராயவரத்திற்கு அன்றே எடுத்துச் செல்லப்பட்டு இராயவரத்தில் 17-3-89 காலை 11-30 மணி அளவில் எரியூட்டப்பட்டது. சிதைக்கு அவரது ஒரே புதல்வர் திரு. அழகப்பன் என்ற பூஞ்சு தீ மூட்டினர்.

கட்டத்தலத்தில் பேராசிரியர் திரு. ச மெய்யப்பன் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. "கல்கி" இதழின் ஆசிரியர் திரு. கி. இராஜேந்திரன், துணை ஆசிரியர் திரு. பி. எஸ். மணி, 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், கவிஞர்கள் திரு. செல்ல கணபதி, திரு. குழ. கதிரேசன், பேராசிரியர் திரு. நா. சுப்பிரமணியன் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு மாயன், திரு தெ. சி. தெய்வசிகாமணி திரு. இ. எஸ். ஹரிகரன் மற்றும் திரு. கந்தசாமி ஆகியோர் குழந்தைக் கவிஞரின் அன்பு, பண்பு நலன்கள் பற்றியும் அவர் குழந்தை இலக்கியத்திற்கு ஆற்றியுள்ள தொண்டுகள் பற்றியும் புகழஞ்சலி செலுத்தினர். இறுதி ஊர்வலத்தில் நகரத்தார்களும் எழுத்தாளர்களும் பதிப்புத் துறையைச் சேர்ந்தவர்களும் வங்கி அலுவலர்களும் பெருமளவில் கலந்து கொண்டு தங்களது இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

வள்ளியப்பாவின் வாழ்க்கைக் குறிப்பு

'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா புதுக்கோட்டை மாவட்டம் இராயவரத்தில் 7-11-1922ல் பிறந்தார். இவரது தந்தையார் பெயர்: வ. தெ. அழகப்ப செட்டியார். தாயார் பெயர்: உமையாள் ஆச்சி. திரு.



வள்ளியப்பா இராயவரம் பழ. நா. அழகப்ப செட்டியாருக்குச் சுவீகாரம் சென்றவர். மாத்தூர் கண்ணூர் பிரிவைச் சேர்ந்தவர். வள்ளியப்பா இராயவரம் சு. கதி. காந்தி பாடசாலையிலும் இராமச்சந்திரபுரம் ஸ்ரீ பூமீஸ்வர சுவாமி உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்றார். பின்னர் பேராசிரியர்கள் கு. மதுரை முதலியார், இளவழகனார். டாக்டர் மா. இராசமாணிக்கனர் ஆகியோரிடம் சில காலம் தமிழ் பயின்றார்.

திருமணம்

இவர் இராயவரத்தில் பிறந்த வள்ளியம்மை ஆச்சியை 4-2-1944ல் மணந்து கொண்டார்.

நூல்கள்

இவர் தனது 13 ஆவது வயதில் கவிதை எழுதத் தொடங்கினார். இவர் எழுதிய 23 குழந்தைப் பாடல்கள் இடம்பெற்ற 'மலரும் உள்ளம்' என்ற நூலே, இவர் எழுதிய முதல் நூலாகும். இவர் இதுவரை குழந்தைகளுக்காக 55 நூல்களைப் படைத்துள்ளார்.

இந்தியன் வங்கிப் பணி

1940ல் அமரர் வை. கோவிந்தன் அவர்களின் "சக்தி" அலுவலகத்தில் பொருளாளராகச் சேர்ந்த இவர், "சக்தி" இதழின் ஆசிரியர் திரு. தி. ஜ. ர. வின் ஆதரவால் சக்தியில் எழுதி, எழுத்தாளரானார்.

பின் 1941ல் அமரர் அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்களது பரிந்துரையில் இந்தியன் வங்கியில் சேர்ந்து பல கிளைகளில் மேலாளராகவும் காரைக்குடிக் கிளையில் வட்டார மேலாளராகவும் பணியாற்றி 30-11-1982ல் ஓய்வு பெற்றார்.

பத்திரிகைத் தொடர்பு

1944 முதல் 1951 வரை புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த "பாலர் மலர்," "டமாரம்," "சங்கு" ஆகிய இதழ்களிலும் 1951 முதல் 1954 வரை வெளிவந்த "பூஞ்சோலை" இதழிலும் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார். இப்போது "கல்கி" நிறுவனம் நடத்தி வரும் "கோகுலம்" சிறுவர் மாத இதழின் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்.

குழந்தை எழுத்தாளர் சங்கம்

1950ஆம் ஆண்டில் குழந்தைகளுக்காக எழுதுவோரை ஒருங்கிணைத்து "சக்தி" வை. கோவிந்தன் அவர்கள் தலைமையில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்து 1950 முதல் 1955 வரை அதன் பொதுச் செயலாளராகவும் 1956 முதல் 1961 வரை தலைவராகவும் 1961 முதல் 1967 வரை ஆலோசகராகவும் பணியாற்றி குழந்தை இலக்கியம் தழைக்கவும் எழுத்தாளர்கள் பலர் உருவாகவும் துணை நின்றார். இப்போது மீண்டும் அச்சங்கத்தின் தலைவராகச் செயலாற்றி வந்தார்.

தமிழ்வாணன் சூட்டிய பெயர்!

'குழந்தைக் கவிஞர்' என்னும் பட்டப் பெயரைச் சூட்டியவர் "கல்கண்டு" இதழின் முன்னாள் ஆசிரியர் அமரர் தமிழ்வாணன் அவர்கள். அவர் வள்ளியப்பாவைப் பற்றி எழுதும் போதும் பேசும் போதும் 'குழந்தைக் கவிஞர்' என்றே குறிப்பிடுவார். அவரைப் பின்பற்றி பல பத்திரிகை ஆசிரியர்களும் வள்ளியப்பாவை 'குழந்தைக் கவிஞர்' என்றே குறிப்பிடத் தொடங்கினர். தமிழ்வாணன் அவர்கள் சூட்டிய 'குழந்தைக் கவிஞர்' என்னும் சிறப்புப் பெயர் வள்ளியப்பா என்னும் இயற் பெயரையும் மிஞ்சிய புகழைப் பெற்றுள்ளது. குழந்தை இலக்கியப் பணிக்குப் பயன் கருதாது அருந் தொண்டாற்றி வந்த அவருக்கு இப்பட்டம் பொருத்தமானதே!



4-11-82ல் பிள்ளையார்பட்டியில் நடைபெற்ற திரு. வள்ளியப்பா — திருமதி வள்ளியம்மை ஆச்சியின் மணி விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் வாழ்த்தும் காட்சி.

தமிழ் எழுத்தாளர் சங்கம்

தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் பொதுச் செயலாளராகவும், துணைத் தலைவராகவும் பணியாற்றிய இவர் 1956ல் அதன் தலைவராக ஒருமனதாகத் தேர்வு செய்யப்பெற்றார். தமிழ் எழுத்தாளர் சங்கம் 1961, 1962ல் நடத்திய மாநாடுகளில் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து சீரிய சேவை செய்தார்.

பாராட்டு

1961ல் நடைபெற்ற மூன்றாவது குழந்தை இலக்கிய மாநாட்டில் இவருக்கு முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் மேதகு ஜாகீர் ஹுசைன் அவர்கள் கேடயம் வழங்கிக் கௌரவித்தார்கள்.

1963ல் லக்னோவில் நடைபெற்ற அனைத்திந்திய குழந்தை எழுத்தாளர் மாநாட்டில் 'தமிழில் குழந்தை இலக்கிய முன்னோடி' என்ற பாராட்டும் பதக்கமும் வழங்கப் பெற்றன.

1975ல் தமிழ்க் கவிஞர் மன்றம் நடத்திய முதல் மாநாட்டில் கேடயம் வழங்கப் பெற்றது.

சென்னை கிண்டி ராஜ் பவனில் 18-4-76 அன்று நடைபெற்ற குழந்தை எழுத்தாளர் சங்க வெள்ளி விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு ஃபக்ருதீன் அலி அகமது அவர்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்தி கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

1984ல் கல்கத்தாவில் நடைபெற்ற கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்க வெள்ளி விழாவில் அமைச்சர் திரு. ஜாடின் சக்கரவர்த்தி குத்துவிளக்கு வழங்கிப் பாராட்டினர்.

1985ல் புதுடில்லியில் நடைபெற்ற குழந்தைக் கல்விக்கான

குழந்தைகள் இன்பமே எனது இன்பம். அவர்களுக் குத் தொண்டு செய்வதே எனது குறிக்கோள்.

—குழந்தைக் கவிஞர்

இந்தியன் கௌன்சில் மாநாட் டில் நாடாளுமன்றத் தலைவர் திரு பலராம் ஜாக்கர் கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்.

குழந்தை இலக்கிய வளர்ச் சிக்குக் கடந்த நாற்பது ஆண்டு களாகத் தொண்டாற்றி வந்த இவரைப் பாராட்டி தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் 3-1-89 அன்று இவருக்குத் தமிழன்னை பரிசும் சான்றிதழும் அளித்துக் கௌரவித்துள்ளது

சிறப்புப் பட்டங்கள்

இவர் பிள்ளைக் கவியரசு, மழ லைக்கவிச் செம்மல், தமிழ்ப் பேர வைச் செம்மல் ஆகிய பட்டங் களைப் பெற்றுள்ளார்.

பரிசு பெற்ற நூல்கள்

இவர் படைத்த மலரும் உள் ளம் (முதல் தொகுதி), பாட்டிலே காந்தி கதை-ஆகிய இரு கவிதை நூல்களும் மத்திய அரசின் பரிசு பெற்றவை.

இவர் படைத்த மலரும் உள் ளம் (முதல் தொகுதி) பாப்பாவுக் குப் பாட்டு -என்கிற இரு கவிதை நூல்களும் நல்ல நண்பர்கள் என்ற கதைப் புத்தகமும் பெரியோர் வாழ்விலே, சின்னஞ்சிறு வயதில் பிள்ளைப் பருவத்திலே - என்கிற மூன்று வாழ்க்கை வரலாற்று நூல் களும்-ஆக ஆறு நூல்களும் தமி ழக அரசின் பரிசு பெற்றவை.

இவரது நூல்களைக் கொண்டு பட்டம் பெற்றவர்கள்

திரு. வெ. கிருஷ்ணசாமி, திரு. கதி. கணேசன் ஆகிய இரு வரும் குழந்தைக்கவிஞரின் கவி தைகளை ஆய்வு செய்து மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திலி ருந்து M.Phill. பட்டம் பெற்றுள் ளனர். திருமதி ஓ. பத்மகுமாரி என்ற பெண் ஆய்வு செய்து கோவைப் பல்கலைக் கழகத்திலி ருந்து M. Phill. பட்டம் பெற் றுள்ளார். திருமதி அம்புஜம் யுவச் சந்திரா என்பவர் ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக் கழ கத்திலிருந்து Ph. D. பட்டம் பெற்றுள்ளார்.

மணி விழா

குழந்தைக் கவிஞர் திரு. அழ.

பூஞ்சோலையும் பூஞ்சும்!

'குழந்தைக் கவிஞர்'. ''பூஞ்சோலை'' என்ற இதழுக்குக் கௌரவ ஆசிரியராக இருந்து பணியாற்றிய காலத்தில் அவருக்குப் புதல்வன் பிறந்தான் என்றும் எனவே அது முதல் அவன் ''பூஞ்சு'' எனச் செல்லமாக அழைக்கப் பெறுவதாக வும் குழந்தைக் கவிஞரின் மூத்த மாப்பிள்ளை திரு. ஆர் எம். அழகப்பன் தெரிவித்தார். அந்தப் பூஞ்சுவின் உண்மைப் பெயர் 'அழகப்பன்' என்பதாகும்.



கோவை நகரத்தார் சங்கம் சார்பாக நடைபெற்ற பாராட்டு விழாவில் அதன் அப்போதைய தலைவர் எஸ். சுப்பையா செட்டியார் அவர்கள் குழந்தைக் கவிஞருக்குப் பொன்னுடை அணிவித்துக் கௌரவிக்கும் காட்சி. நடுவே துணைவேந்தர் டாக்டர் ஆர். சுப்பையன் (ஆண்டு : 1982)

வள்ளியப்பா- திருமதி வள்ளியம்மை ஆச்சியின் மணி விழா 4-11-1982ல் பிள்ளையார் பட்டியில் நடை பெற்றது

மொழி பெயர்ப்பு

தென்னாட்டு ஆறுகள் பற்றி ''நம் நதிகள்'' எனனும் பெயரில் இவர் படைத்த நூலை, தேசிய மொழிப் புத்தக டிரஸ்ட் 14 இந்திய மொழிகளில் வெளியிட்டுள்ளது. இவர் இயற்றிய பல பாடல்கள் ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய பல மொழிகளில் வெளிவந்துள்ளன.

பாடல் பதிவு

குழந்தைக் கவிஞர் இயற்றிய பல பாடல்கள் நாடாவில் ஒலிப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அப் பாடல்களை திரைப்படப் பின்னணிப் பாடகர் டி. எம். சௌந்தரராஜனும் பின்னணிப் பாடகி பி. சுசீலாவும் பாடியுள்ளனர். வெளி நாடுகளில் உள்ள தமிழர்களுக்காக மதுரைக் காமராசர் பல்கலைக் கழகமும் இவரது சில பாடல்களை ஒலிப்பதிவு செய்துள்ளது.

வாழ்க்கை வரலாறு நூல்

இவரது வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து டாக்டர் திரு. பூவண்ணன் ''குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா வரலாறு'' என்ற பெயரில் நூலாகத் தயாரித்துள்ளார். இதனை வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. (இது குழந்தைக் கவிஞரின் மணி விழா வெளியீடாகும்.)

குடும்பம்

குழந்தைக் கவிஞருக்கு மனைவி வள்ளியம்மை ஆச்சியும் அலமேலு அழகப்பன், கஸ்தூரி அருணாசலம், உமையாள் வள்ளி

யப்பன், தெய்வானை நாச்சியப்பன் என நான்கு புதல்விகளும் அழகப்பன் என்ற புதல்வரும் 6 பேரன்களும் 2 பேத்திகளும் உள்ளனர். இவரது புதல்வர் B. E. படித்தவர். பரோடாவில் குஜராத் கம்யூனிகேஷன் அண்டு எலெக்ட்ரானிக்ஸ் லிட். நிறுவனத்தில் சீனியர் மானேஜராகப் பணியாற்றி வருகிறார். (இவரது துணைவியார் பெயர் சீதா லெட்சுமி) குழந்தைக் கவிஞரின் கடைசிப் புதல்வி தெய்வானை, M. A. படித்தவர் இப்போது B. Ed. படித்துக் கொண்டிருக்கிறார். குழந்தைக் கவிஞரின் மாப்பிள்ளைகள் நான்கு பேரும் வங்கிகளில் பணியாற்றி வருகின்றனர்.

● ●

தேவியின் படைப்புகள்

'குழந்தைக் கவிஞர்' திரு. அழ. வள்ளியப்பாவின் கடைசிப் புதல்வி திருமதி தெய்வானை நாச்சியப்பன் 'தேவி' என்ற புனைப் பெயரில் சில நூல்களைப் படைத்துள்ளார். வெளிநாட்டு நூல்களிலிருந்து பல சிறுகதைகளை மொழி பெயர்த்து "பல தேசத்துக் குட்டிக் கதைகள்" என்ற பெயரில் இரு தொகுதிகளையும் பெரிய புராணத்தில் நாயன்மார்களைப் பற்றிய கதைகளை அடிப்படையாகக் கொண்டு "கடவுளைக் கண்டவர்கள்" என்ற பெயரில் ஒரு நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது கணவர் கண்டனூரைச் சேர்ந்த திரு நாச்சியப்பன் வங்கிப் பணிக்கிடையே புதுக் கவிதைகளை ஆர்வமாக எழுதி வருகிறார்.

புகழுடம்பால் வாழ்வாய்!

'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன்

துள்ளிவரும் குழந்தைகளின் உலகத் திற்குத்
தொண்டாற்றிக் குழந்தையொடு குழந்தை யாகக்
கொள்ளைகொளும் சிரிப்பாலே பாட்டுப் பாடி
குணமான சுவைசொல்லிச் சங்கம் வைத்து
வெள்ளமென இலக்கியங்கள் படைத்துத் தந்து
வினையாற்றி ஒழுக்கமுடன் வாழ்ந்து காட்டி
உள்ளமெலாம் குழந்தைகட்கே அர்ப் பணித்த
உயர்குழந்தைக் கவிஞர் அழ வள்ளியப்பா
உலகமெலாம் அழுமாறு பிரிந்து சென்றாய்
உன்முகத்தை இனிஎன்று காண்போம் அப்பா
தலமாக உன்வீடு குழந்தை கட்குத்
தரிசனங்கள் தருகின்ற கோயி லாகும்
வலமாக உன்படத்தை வணங்கும் போது
வாஞ்சையுடன் புன்சிரிப்பால் வாழ்த்துச் சொல்வாய்
புலமையிலே குறையில்லாப் புலவர் ஏறே!
புகழுடம்பால் என்றென்றும் வாழ்வாய் நீயே.

பாரதிக்கு 1934ல் சங்கம் கண்டவர்!

12 வய்தில் (1934ல்) குழந்தைக் கவிஞரும் மற்றும் நண்பர்களும் ஒன்று சேர்ந்து இராயவரத்தில் பாரதி பெயரில் சங்கம் ஏற்படுத்தினார்கள். ஆண்டுதோறும் விழா எடுத்தார்கள். அங்குள்ள முத்துமாரியம்மன் கோவில் நிர்வாகிகளின் அனுமதி பெற்று வெள்ளிக் கேடகத்தில் பாரதியின் படத்தை வைத்து மேள தாளங்களுடன், கொட்டு முழக்கத்துடன் ஊர்வலமாக எடுத்து வந்தார்கள். நாடு விடுதலை அடைவதற்கு முன்பு இது நடந்தது விசேடமாகும்.

அதேபோல் காந்தி பிறதந்நாளையும் - மக்களிடம் அரிசி, பருப்பு, பணம் பெற்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏழைகளுக்கு உணவளித்து சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

இளம் வயதிலேயே சங்கம் நடத்துவது, தொண்டு செய்வது, பொதுக் காரியங்களில் பங்கேற்று உழைப்பது என்று திரு. வள்ளியப்பா ஆர்வத்துடன் செயலாற்றினார்.

—அ. அப்துல் கரீம்

("கவிதை தந்தவர் கதை" என்ற நூலிலிருந்து)

வள்ளியப்பாவுக்கு அஞ்சலி

—செல்வி மங்கையர்க்கரசி மீனாட்சி—


எங்கள் உள்ளம் ஈர்த்திட்ட
இனிய ஐயா வள்ளியப்பா
சங்கம் வைத்துக் கதைசொன்னாய்
சாக்லெட் ரொட்டி தந்திட்டாய்

பாட்டுப் பாடி நல்லொழுக்கம்
பலவும் தினமும் போதித்தாய்
நாட்டுச் செல்வம் குழந்தையென
நாளும் எழுதிச் சாதித்தாய்

போனில் கூடக் கவிதைகளைப்
புதிதாய்ச் சொல்லக் கேட்டநீ
வானில் கவிதை கேட்கவென
வையம் மறந்து போனாயோ?

உன்னை என்று காண்போம்யாம்?
உலகக் குழந்தை அனைவர்க்கும்
அன்னை யான வள்ளியப்பா
அடிகள் தொழுதே அஞ்சலித்தேன்.

(குழந்தைக் கவிஞரின் இறுதிச் சடங்கு இராயவரத்தில் நிகழ்ந்தபோது பாடியது.)



மேல்உலகப் பிள்ளைகளும் அமுதம் தன்னை
மிகத்திகட்டும் என்றுஉண்ண மறுத்த தாலே
பால்மழலைக் கவியரசாம் உன்னை வானோர்
பரிந்தழைத்துச் சென்றாரோ? அங்கு பள்ளி
நூல்நடுவே புதுப்பாடல் பிள்ளைக் காக
நொடிப்போதில் நீயடுக்க எழுது வாரோ?
கோலமிகும் வள்ளியப்பாக் கிலுகி லுப்பை
குழந்தைகளும் வேண்டுகிறார்! எங்கு செல்வோம்?

— கவிஞர் இராகவன்முத்து

பெருமைக்குரிய பண்பாளர் குழந்தைக் கவிஞர்

—முனைவர் தமிழண்ணல்—

''குழந்தைகளுக்காக எழுதி வரும் எழுத்தாளர்களுக்கெல்லாம் தலைவராகவும் வழிகாட்டியாகவும் அவர்களை ஊக்குவிப்பவராகவும் இருந்து வருபவர் குழந்தை கவிஞர் அழ. வள்ளியப்பா.'' என்று சோமலெ அவர்கள் ''செட்டிநாடும் செந்தமிழும்'' என்ற நூலில் 1984 இல் எழுதினார்கள்.

ஆம். குழந்தை இலக்கியத்தில் முதன்மை படைத்த எழுத்தாளரும் பயண இலக்கியத்தில் முதன்மை படைத்த எழுத்தாளரும் இன்று இல்லை தமக்கு முன்னோடிகள் இருந்தாலும் தத்தம் எழுத்துத் திறத்தாலே அவ்வத் துறையில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இணையற்ற இடத்தைப் பெற்றவர்கள். இவர்கள்.

பாரதியாரும் கவிமணியும் குழந்தைப் பாடல்களை எழுதி, அவ் வகைமையைத் தோற்றுவித்து வளர்த்தனர். ஆனாலும் 'குழந்தைக் கவிஞர்' என்று இன்று எங்கேனும் சொல்லிப் பாருங்கள் எல்லோரும் இராயவரத்தில் பிறந்த அழ. வள்ளியப்பாவைத்தான் நினைவுகூர்கிறார்கள். ஏன்? அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அழ. வள்ளியப்பா தமக்கு என இந்த ஒரு துறையையே தேர்ந்தெடுத்துக் கொண்டார். அதற்கெனவே எழுதினார்; வாழ்ந்தார். மற்றவர்களுக்குக் குழந்தைப் பாடல் எழுதுவது பல்வேறு பணிகளில் ஒன்று ஆனால் இவருக்கோ அதுவே தலையாய பணி. அதனால்தான் தமிழகம் முறையாக இவரை மட்டுமே 'குழந்தைக் கவிஞர்' என அழைக்கத் தொடங்கியது. இரண்டாவது காரணம் இவர் தாமும் குழந்தையாக மாறி 'உண்மையான' குழந்தைப் பாடல்களையே பாடினார். ஒன்றும் வகுப்பு முதல் பள்ளிப் படிப்பு முடியும் வரை, அழ. வள்ளியப்பா பாடல் இல்லாத தமிழ்ப் பாடநூல் ஒன்றைப் பார்க்கமுடியாது. குழந்தைகளைப் பற்றி எழுதுவது, குழந்தைகளைப் பாராட்டி எழுதுவதெல்லாம் குழந்தைப் பாடல் ஆகிவிடா.




பிள்ளைத் தமிழைக் குழந்தைகளிலக்கியம் என்றால் யாராவது மனம் ஒப்புவார்களா?

குழந்தைக் கவிஞர் எளிமையானவர்; பண்பாளர். புன்னகை பூத்த முகமுடையவர். ஆம், குழந்தைக் கவிஞர் என்பதற்கு மிகப் பொருந்திய தோற்றமுடையவர். எக்காரணத்தை முன்னிட்டும் பிறர் பொருட்டு மனம் சிறிது வருந்துமாறும் நடந்து கொள்ள மாட்டார். மதுரைக் காமராசர்

பல்கலைக் கழகம் அவரைத் 'தமிழ்ச் செம்மல்' எனப் பாராட்டியது. மார்ச்சு மாதம் 10-ஆம் நாள் நடந்த கல்விப் பேரவைக் கூட்டத்திற்கு வந்த அவர் அன்று மாலை மயங்கி விழுந்து விட்டார். உடனே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். உடல் நலம் தேறி வருவதாக அறியப்பட்ட நிலையில், மீண்டும் நோய்மிகுந்து அவர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். நகரத்தார் சமூகம் பெருமைப்படக் கூடிய எழுத்தாளர் என்பதை நம்மில் ஒவ்வொருவரும் மறத்தல் கூடாது. தமிழ் இலக்கியம் உள்ள அளவும் அவர் பெருமை நிலைபெறும். கவியரசர் கண்ணதாசன், உலகம் சுற்றிய தமிழர் சோமலெ, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா போன்ற சிறப்புக்குரியவர்களின் நினைவைப் போற்ற நகரத்தார்கள் முன்வருதல் வேண்டும்.

இயற்கை எய்தினார்

வலையபட்டியைச் சேர்ந்த திரு. நா. ஏகப்ப செட்டியார் தமது 68ஆவது வயதில் 17-3-89 அதிகாலை 5-45 மணி அளவில் இயற்



கை எய்தினார். நம்மினத்தில் முதன் முதலாக மருந்து வணிகம், பழைய காகித வணிகம் கழிவுப் பொருட்கள் வணிகம் மற்றும் தீப்பெட்டி உற்பத்தித் தொழிலைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்தியவர் இவர் இவரது புதல்வர்கள் இப்போதும் பழைய காகித வணிகம் மற்றும் கழிவுப் பொருட்கள வணிகங்களை திருவனந்தபுரம், எர்ணாகுளம், கோவை சேலம் ஆகிய நகரங்களில் நடத்தி வருகின்றனர்.

ஆசிரியருக்குக் கடிதம்

அன்புமிக்க ஆசிரியர் அவர்களுக்கு,

''நகரத்தார் குரல்'' பிப்ரவரி 1989 இதழில் உங்களது வெளி நாட்டு அனுபவங்கள் கட்டுரையைப் படித்த என் நண்பர்கள் பலர் தங்கள் கட்டுரையில இருந்த சிறு பிழையை என் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்,

அதாவது கோட்டையூரைச் சேர்ந்த திரு. அழகப்பன் நியூயார்க் பிள்ளையார்கோவில் டிரஸ்டி என்று எழுதியிருக்கிறீர்கள், அவர்கள் கானாடுகாத்தானைச் சேர்ந்தவர்கள் என்பதையும் மதுரையில் பணிபுரிந்த முன்னாள் வருமான வரி ஆணையாளர் திரு. ஏ. அருணாசலத்தின் சகோதரர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு

அலமேலு அருணாசலம்

குழந்தைக் கவிஞரின் நினைவு நிரந்தர நிதி

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவாக ராயவரம் சு. கதி. காந்தி உயர்நிலைப் பள்ளியில் ஆண்டுதோறும் குழந்தைக் கவிஞரின் பாடல ஒப்புவித்தல் போட்டியை நடத்திப் பரிசளிக்க ரூ. 1000/- நிரந்தர நிதியாக பேராசிரியர் திரு. ச. மெய்யப்பன் வழங்கினார்.


நெஞ்சம் மறக்க முடியாத குழந்தைக் கவிஞர்

—எல். சுந்தரம்—

இனிய எழுத்தாளர் திரு. வ. தேனப்பன் அனுப்பியிருந்த குழந்தைக் கவிஞரின் பேட்டியை ''நகரத்தார் குரல்'' நவ '82 இதழில் வெளியிட்டிருந்தோம். அதற்காக முதன் முதலாக நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியிருந் தார், குழந்தைக் கவிஞர். அதைத் தொடர்ந்து நான் அவருக்கு எழுத, அவர் எனக்கு எழுத இப் படியாக எங்கள் நட்பு வளர்ந்தது.

குழந்தைக் கவிஞர் ஒரு எடுத் துக் காட்டான மனிதர். அவரது எளிமை; சுறு சுறுப்பு; சிறியவர் -பெரியவர் என்ற பாகுபாடின் றிப் பழகும் பண்பு; மனம் திறந்த பேச்சு எல்லாமே அவரோடு பழ கும் எவரையும் கவரும்.

நீங்கள் சந்தித்துப் பழகிய தமிழறிஞர்கள், கவிஞர்கள், பெரி யவர்களைப் பற்றி ''நகரத்தார் குர''லில் தொடர்ந்து எழுத வேண்டுமென நான் கேட்டுக் கொண்டதற் கிணங்க அவர், ''சக்தி'' வை. கோவிந்தன், ஏவி. மெய்யப்ப செட்டியார், கவியரசு கண்ணதாசன் ஆகியோரைப் பற்றி விரிவான அருமையான கட்டுரைகளை எழுதியனுப்பியிருந் தார். அடுத்து ஏ. கே. செட்டி யார், கம்பன் அடிப்பொடி போன்றவர்களைப் பற்றி எழுதுவ தாக இருந்தார். ஆனால் அவரது வேலைப் பளு, அப்பணிகளைத் தொடர முடியாமல் செய்து விட் டது.



படத்தில் (இடமிருந்து வலமாக) திருவாளர்கள் டிஆர். எஸ்டி. கண்ணப்பன், 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன், 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா, கவிஞர் பொன். ராசன், எல். சுந்தரம் (நடராஜ புரம், சிவன்கோயில் முன்பு 3-2-89 அன்று எடுக்கப் பெற்றது)

'நான் இன்ன நாளில் மதுரை வருவேன்; இன்ன நாளில் சென்னை திரும்புவேன்' என உறவினருக்கு எழுதுவது போல் எனக்குப் பாசத்தோடு கடிதம் எழுதுவார். சுக-துக்கங்களைப் பங்கிட்டுக் கொள்வார். ஏதாவது தேவை என்றால் 'அதை அனுப்புங்கள்' என்று எழுதாமல் 'அனுப்ப முடிந்தால் நல்லது' என பண்போடு எழுதுவார். 'தங்களைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெறுவேன்' என எழுதுவார். சந்திக்க இயலாவிட்டால் ஊர் போய்ச் சேர்ந்து 'தங்களைச் சந்திக்க இயலாமற் போய் விட்டது' என நினைவோடு எழுதுவார். அவரிடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை ஏராளம்.

பத்திரிகை தொடர்பாக அவர் விரும்பும் சிறு சிறு உதவிகளை ஆர்வத்தோடு நான் செய்து கொடுப்பேன். அவைகளுக்கெல்லாம் அவ்வப்போது நன்றி தெரிவித்து எழுதுவார். அவர் நன்றி தெரிவிக்க மறந்ததே கிடையாது.

ஒரு முறை சோமலெ அவர்களைப் பற்றி எழுதியபோது ''செட்டிநாடும் செந்தமிழும்'' நூலில் தமிழ் வளர்த்த பலரையும் பற்றிக் குறிப்பிட்ட சோமலெ அவர்கள் ஒரே ஒருவரை மட்டும் வேண்டுமென்றே விலக்கி விட்டார். அவர்தான் சோமலெ! தம்மைப் பற்றிக் கூறவிரும்பாத அவரைப் பற்றி டாக்டர் தமிழண்ணலும் திரு. லேனா தமிழ்வாணனும் நீங்களும் எழுதியுள்ள கட்டுரைகள் அவரது பெருமைக்குச் சான்று கூறுகின்றன!' என்று கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அது இன்னும் என் நெஞ்சில் நிழலாடுகின்றது.

''கோகுலம்'' இதழில் வெளியிட ஏ. கே. செட்டியாரின் ஒளிப்படத்தையும் சில கட்டுரைகளையும் குழந்தைக் கவிஞர் கேட்டிருந்தார். உடனடியாகத் தேடிப் பிடித்து அனுப்பினேன். அதற்கு அவர் நன்றி தெரிவித்திருந்ததோடு ''மறுதபாலில் அனுப்பி வைத்த தங்களது சுறுசுறுப்பையும் என்மேல் தாங்கள் வைத்துள்ள அன்பையும் நினைந்து மகிழ்கிறேன்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனது புதல்வன் திருமணத்தில் கலந்து கொண்டு தாங்கள் வாழ்த்திப் பேச வேண்டுமென்று கேட்டு அவருக்குக் கடிதம் எழுதினேன். அதற்கு அவர் ஒப்புக் கொண்டு உடனடியாகப் பதில் எழுதிய வண்ணம் ஓய்வில்லாத பல பணிகளுக்கிடையே சென்னையிலிருந்து 3-2-89 அன்று நடராஜபுரம் வந்து திருமணத்தில் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசி எங்களையெல்லாம் பெருமைப்



படுத்தினார். ஓர் எளியவனின் அழைப்பை மதித்து திருமணத்திற்கு வந்து சென்ற அந்தப் பெருந்தகையாளரின் அன்பிற்கு ஈடு இணையே கிடையாது.

அவர் எனக்கு எழுதிய 27-1-89 கடிதம் அவரது கடைசிக் கடிதமாக இருக்குமென்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அந்த மாபெரும் மனிதரின் பிரிவை நினைக்கும்போது கண்களில் நீர் துளிர்க்கிறது. குழந்தை மனம் கொண்ட அந்தக் குழந்தைக் கவிஞரை நாம் இனி எப்போது காண்போம்?



டாக்டர் ப. அண்ணுமலே

தோற்றம்: 14-5-1955 மறைவு : 24-1-1989

வருந்துகிரோம்

பலவான்குடி நெ. மு. ப.சு. அ. பழநியப்ப செட்டியார் - விசாலாட்சி ஆச்சிக்கு 14-5-1955ல் டாக்டர் அண்ணுமலே தலைமகனாகப் பிறந்தார். கிண்டி அழகப்பச் செட்டியார் காலேஜ் ஆப் டெக்னாலஜியில் B. Tech.,ல் அதிகமான மதிப்பெண்கள் பெற்றும் மேல் படிப்பிற்கு 1978ல் Clarkson College of Technoiogy POTS DAMல் சேர்ந்து 1979ல் M.S. (Chemical Engineering) சிறந்த மாணாக்கனாக தேர்வு பெற்று Adviserகளின் ஆலோசனைப்படி 1983ல்Ph,Dஐ (Successful Experiments on rotating fluids) முடித்தார். "The post Standard" என்ற அமெரிக்க நாளிதழ் (dt.31-12-79) இவருடைய புகைப்படத்தை வெளியிட்டு இவரது சாதனையை "ஒரு வினாடியின் ஏழிலொரு பகுதி காலஅளவில், அதிவிரைவு காமிராவை இயக்கி ஆராய்ந்து பழனியப்பன் அண்ணாமலை உணர்த்துகிறார்" என்று விளக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவர் 10-9-1981ல் கண்டனூர் திரு. தெ. ராம. லெ. நா. சுப்பிரமணியம் செட்டியார் (N.S) அவர்களின் புதல்வி நாகரத்தினத்தை மணந்தார். இவருக்கு (5 வயதிலும் 5 மாதத்திலும்) இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர்.

jet propulsion Laboratory, PASEDENA, CALIFORNIAவில் Research Associate ஆக 2 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் 1986ல் சிங்கப்பூர் வந்து Petro Chemical Corporation of Singapore ல் process Engineer ஆக பணியாற்றிக் கொண்டிருக்கையில், பழநிக்குக் காவடி எடுப்பதாக வேண்டுதல் இருந்ததை நிறைவேற்ற 7-1-89ல் சென்னை வந்து 16-1-89 பலவான்குடியிலிருந்து காவடி எடுத்து குன்றக்குடி வந்து இதர காவடிகளுடன் தைப்பூசத்திற்கு பழநி சென்றடைந்து 24-1-89 அன்று மலை ஏறும் போது சுமார் மாலை 4 மணியளவில் மாரடைப்பினால் இறைவனடி சேர்ந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிரோம்.

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறீர்

—குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

(குழந்தைக் கவிஞர் இயற்றிய இப்பாடல் அச்சிடப் பெற்று இராயவரத்தில் உள்ள அவரது வீட்டில் பார்வைக்காகப் பொறுத்தப்பட்டுள்ளது.)

இராயவரம் முத்துமாரியம்மன்

சக்திமிக்க தெய்வம் எங்கள்
முத்துமாரி அம்பிகை
சரணடைந்த பேருக்கெல்லாம்
அருள்சுரக்கும் அம்பிகை
பக்தர் நெஞ்சில் குடியிருக்கும்
முத்துமாரி அம்பிகை
பதம்பணிந்தால் இதம் குளிர்ந்தே
பாதுகாக்கும் அம்பிகை
தீமையாவும் சுட்டெரித்துச்
சீர்பெருக்கும் அம்பிகை
செல்வம், கல்வி நீண்ட ஆயுள்
நல்கும் எங்கள் அம்பிகை
நாமெல்லோரும் சேமமாகப்
பூமிதன்னில் வாழவே
ராயவரம் மாரியம்மன்
நல்லருளை வேண்டுவோம்

—குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

("பாடிப் பணிவோம்" என்ற நூலிலிருந்து)

(குழந்தைக் கவிஞர் இயற்றிய இப்பாடல் அவர் பிறந்த ஊரான இராயவரம் முத்துமாரியம்மன் திருக்கோயிலில் சலவைக் கல்லில் பதிக்கப் பெற்றுள்ளது)

மூன்றும் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
10-11-47

சிவபதம் :
28-4-86

வேந்தன்பட்டி

திருமதி பாப்பா என்ற அழகம்மை ஆச்சி

பூவோடும் பொட்டோடும் எம்மை விட்டுப்
பொன்னுலகம் அடைந்திட்டீர்; அம்மா நாங்கள்
நாவோடு மொழிகுளறக் கண்ணீர் சோர,
நாளெல்லாம் வருந்துகிறோம்; எங்க ளுக்குச்
சீரோடு சிறப்புத் தான் தருவான் வேண்டி
தேவரிடம் தூது சொலச் சென்றீர் போலும்,
தேரோடும் திருவிழாப் போல் நமது இல்லம்
தினந் தினமும் மகிழ்வுறவே செய்வாய் அம்மா?
ஆறுகி இருகண்ணும் கண்ணீர் சோர
அழகம்மை வாழ்வரசி முப்பத் தெட்டில்
வேருன உல கடைந்த கார ணத்தை
விளம்பிட்டால் சற்றேயாம் அமைதி கொள்வோம்
பேறெல்லாம் எங்களுக்கு இருந்திட் டாலும்
பெருங் குறைதான் நீயில்லை யென்ப தொன்றே
ஆறோடு ஒருமைந்தர் கணவ ருந்தான்
அமைதி பெற வழி தானே திறப்பாய் அம்மா.
நூறாக உனது கிளை செழித்தே ஓங்க
நூபுரத்தாய் மீனாட்சி காப்புத் தானே.

ராம. மு. ராம. பிச்சப்ப செட்டியார் – கணவர்
பைனான்சியர்ஸ், பாலமேடு, அலங்காநல்லூர்
முத்து மீனாட்சி - ராமநாதன் செட்டியார்
மரகதவல்லி - செல்லப்ப செட்டியார் B. Com.
சண்முகவல்லி - காசிராஜன் செட்டியார் B. SC.
ராமநாதன் – வள்ளியம்மை - கண்ணம்மை -
சிட்டு மீனாட்சி

மு ராம தெய்வானை - பேத்தி
முத்துக் கருப்பன் - பேரன்
மற்றும் சகோதர சகோதரிகள்

பாராட்டு விழா

தேவகோட்டை நகரச் சிவன் கோயில் குடநீராட்டு சிறப்புற நடைபெற முக்கியமாகப் பாடு பட்டவர்களுக்கும் கோயில் நடப்பு டிரஸ்டிகளுக்கும் தேவகோட்டை நகரப் பள்ளியில் 20-2-89 அன்று அறுபடை வீடு பாதயாத்திரைக் குழுவினரால் ஒரு பாராட்டு நடத் தப் பெற்றது.

இசைத் தொண்டர்கள் திரு. ஆர். எம். லெட்சுமணனும் திரு. என். காசிநாதனும் இறைவணக் கம் பாடினர். அருள் தொண்டர் திரு. கண. சந்திரசேகரன் வர வேற்றார்.

திருவாளர்கள் அகத்தீஸ்வரக் குருக்கள், கி, கரு. ராம. சாமிநா தன் செட்டியார், சோம. நாராய ணன் செட்டியார், லெ. பெரிய அழகப்ப செட்டியார், சொ. மெ. பழ. சோமையா செட்டியார், ஆகி யோர் மாலை அணிவித்துப் பொன் னாடை போர்த்திப் பாராட்டப் பெற்றார்கள்.

திரு. கு. கரு. வெ. இராமநா தன் செட்டியார், திரு. கேஆர். முத்தையா செட்டியார் இருவரும் மேற்படியார்கள் செய்த தொண்டு களைப் பாராட்டிப் பேசினர்.

'பழம்நீ' பதிப்பகத்தைச் சேர்ந்த திரு. லெ. மு மு. முத்து மாணிக்கம் திரு. சோம. நாராய ணன் செட்டியாருக்குப் பொன்னா டை போர்த்தினார்.

நடப்பு டிரஸ்ட்டிகளாகிய திரு. ராம. வள்ளியப்பசெட்டியார் திரு. சேவு. ராம. அரு. ராம. சுப்பிரமணியன் செட்டியார், திரு. லெ. லெட்சுமணன் செட்டியார், திரு. எப். பழனியப்ப செட்டியார், திரு. ந. வள்ளியப்ப செட்டியார் ஆகியோர் மாலையணிவித்து கௌ ரவிக்கப் பெற்றனர்.

திரு. கி. கரு. ராம. சாமி நாதன் செட்டியார், திரு. சோம. நாராயணன் செட்டியார் இருவ ரும் பாராட்டுக்கு ஏற்புரை கூறினர்.

திருத்தொண்டர் திரு. ஆர். வயிரவன் நன்றி கூறினார்.

பாராட்டுகிறோம்

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபைத் தலைவர் வ. பழ. சா. பழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் பேரனும் மதுரை சென்ட்ரல் பேப்பர் மார்ட் உரிமையாளர் திரு. அண்ணாமலைச் செட்டியா ரின் புதல்வனுமாகிய செல்வன் அ. செந்தில்குமார் மதுரையில் உள்ள மதுரைக் கல்லூரியில் இளங்கலை சமூகவியலில் (B. A.



Sociology) 72 சதவிகித மதிப் பெண்கள் பெற்று அக்கல்லூரியி லேயே முதன்மை பெற்றுள்ளார். 21-3-89 அன்று மதுரைக் கல்லூ ரியில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் புது டில்லி உச்ச நீதி மன்ற நீதிபதி திரு. வெங்கட் ராமையா அதனைப் பாராட்டி பரிசு வழங்கியுள்ளார்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ தேவகோட்டை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் மண்டலாபிஷேகம் பங்குனி மீ 13உ (26-3-89) காலையிலும், சுவாமி திருவீதி உலா மாலையிலும் சிறப்பாக நடைபெற்றன.

ஃ இராங்கியம் சுப்பிரமணியர் திருக்கோயிலின் மண்டலாபிஷேகம் பங்குனி மீ 14உ (27-3-89) சிறப்பாக நடைபெற்றது.

ஃ காரைக்குடி கம்பன் கழகத்தின் சார்பில் கம்பன் மணி மண்டபத்தில் கம்பன் திருநாள் 20-3-89 முதல் 22-3-89 முடிய மூன்று தினங்களும் 23-3-89 அன்று நாட்டரசன்கோட்டை கம்பன் அருட்கோயிலிலும் சிறப்பாக நிகழ்ந்தன.

ஃ அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர், பேராசிரியர் இராம. சேதுநாராயணன் செட்டியார் அவர்களுக்கு அவர் பிறந்த ஊரான காளையார் மங்கலத்தில் 8-3-89 அன்று பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இல. பழமலை தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

ஃ கோவிலூர் மடாலயத்தில் 22-3-89 அன்று ஸ்ரீ சச்சிதானந்த ஆண்டவருக்குக் குருபூஜை நடைபெற்றது.

ஃ செட்டிநாடு அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலைச் சேர்ந்த கொத்தரி அருள்மிகு சோலை ஆண்டவரின் பூச்சொரியல் விழா தமிழ்ப் புத்தாண்டு நாளன்று (14-4-89) நடைபெற உள்ளது. அதனையொட்டி அன்று இரவு 7 மணி அளவில் 'நவரசத் திரைப் படப் பாடல்கள் இலக்கியமா? இலக்கியம் இல்லையா?' எனும் தலைப்பில் புலவர்மாமணி திரு. மா. முத்துராமன் தலைமையில் பட்டிமண்டபமும் நடைபெற உள்ளது.

ஃ மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 8-4-89 அன்று சித்திரைத் திருவிழா தொடங்குகிறது. 17-4-89 அன்று திக் விஜயம். 18-4-89 மீனாட்சி திருக்கல்யாணம். 19-4-89 திருத்தேர். 20-4-89 எதிர் சேர்வை. 21-4-89 வைகை ஆற்றில் கள்ளழகர் எழுந்தருளல்.

ஃ மதுரை தியாகராசர் கல்லூரி முதல்வர் முனைவர் திரு. எஸ். சொக்கலிங்கத்திற்குத் தமிழக அரசு அண்மையில் நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

ஃ சிவகங்கை சிவன் கோவிலில் உள்ள சுப்பிரமணிய சுவாமிக்கு பங்குனி உத்திரத் திருவிழா இரண்டாம் நாளன்று (14-3-89) அரண்மனை சிறுவயல் திரு. சுப. கண. கண்ணப்ப செட்டியார் பொறுப்பில் நகரத்தார்கள் மண்டகப்படி சிறப்பாக நடைபெற்றது. மாலையில் ''திருமுருகன் திருத்தலங்கள்'' என்ற தலைப்பில் செல்வி அரு. ஸ்ரீதேவி தலைமையில் பாலர் கருத்தரங்கம் நடைபெற்றது.

வள்ளியப்பாவுக்கு அஞ்சலிக் கூட்டம்

அமரர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவுக்குக் காரைக்குடி குழந்தை இலக்கியச் சங்கத்தின் சார்பில் அஞ்சலிக் கூட்டம் 16-3-89 மாலையில் 'பொற்கிழிக் கவிஞர்' திரு. அரு. சோமசுந்தரன் இல்லத்தில் நடைபெற்றது. எழுத்தாளர்களும், கவிஞர்களும். நகரத்தார்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். செயலர் திரு. ஜோசப் ஸ்டாலின் வரவேற்ருர். பொற்கிழிக் கவிஞர் திரு. அரு. சோமசுந்தரன் தலைமை தாங்கினுர். பேராசிரியர் திரு. ஜவஹர்லால், எழுத்தாளர் திரு. அய்க்கண், பாவலர்மணி திரு. ஆ. பழநி, திரு. ராஜமாதவ கலாநிதி, கவிஞர் திரு. நா. மீனவன், திரு. சுந்தரம் செட்டியார், செல்வி பதிப்பகம் திரு. சிவராமன், திரு. அசோக், திரு. பொன். ஆறுமுகம், மங்கையர்க்கரசி மீனுட்சி, இராம. சோலையப்பன் ஆகியோர் அஞ்சலி உரை ஆற்றினர். கவிஞர் திரு. பொன். ராசன் நன்றி கூறினுர்.

கோவையில் அஞ்சலிக் கூட்டம்

குழந்தைகவின் நெஞ்சங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்து இறவாப் புகழ் பெற்ற ஏந்தல் அமரர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவுக்கு கோவை நகரத்தார் சங்கம் சார்பாக சங்கக் கட்டிடத்தில் 1-4-89 அன்று மாலை அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணுபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்.

நல் வாழ்த்துக்கள்!



SP. தியாகராசன்

பேங்கர் & பைனான்ஸியர்ஸ்

லெட்சுமி இல்லம்
கொப்பனாபட்டி
(புதுக்கோட்டை மாவட்டம்)

போன் : 163

சார்பு நிறுவனங்கள்:

தியாகராசா பைனான்ஸியர்ஸ்

9-A நேரு ரோடு, S. S. காலனி, மதுரை-16

போன் : 25835 & 34524

லெட்சுமி பைனான்ஸியர்ஸ்

ஜவஹர் தெரு. மதுரை-16

ஜெயலெட்சுமி பைனான்ஸியர்ஸ்

ஜெய்ஹிந்த்புரம், மதுரை-11

SP. T. பைனான்ஸ் கார்ப்பரேஷன்

ஜெய்ஹிந்த்புரம், மதுரை-11

SP. T. பைனான்ஸியர்ஸ்

செல்லூர், மதுரை-2

SP. T. சண்முகம் பைனான்ஸ் கார்ப்பரேஷன்

திருமங்கலம்